## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
## S.C.No.71/2020

2025 ஆம் வருடம் ஜூன் மாதம் 04 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அன்னலட்சுமி (அ.சா.11) | தொழில் | : காவல் ஆய்வாளர், பொருளாதார குற்றப்பிரிவு, திண்டுக்கல் |
| த/பெ., | : | திரு. | வயது | : 44 |
| க/பெ. | : | திரு.கணேசன் | | |
| கிராமம் | : | திண்டுக்கல் | இனம் | : பெண் |
| தாலுகா | : | திண்டுக்கல் | நாள் | : 04.06.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | |

எதிரி முன்னிலையாகியுள்ளார்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் தற்போது திண்டுக்கல் பொருளாதார குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.06.2016 ம் தேதி பகல் 12.00 மணிக்கு பழனி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது பழனி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பழனி சத்யா நகரைச் சேர்ந்த திவ்யகுமார் என்பவரை விசாரிக்க அவர் எழுத்துமூலமாக கொடுத்த புகாரை பெற்று நிலையம் வந்து 13.00 மணிக்கு பழனி நகர் காவல் நிலைய குற்ற எண்.524/2016 பிரிவு 294(பி), 307, 506(2) இ.த.ச. வாக வழக்கு பதிவு செய்தேன். அதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகாரையும் இணைத்து பழனி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கை விசாரணைக்காக காவல்ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

**புகாரை யார் எழுதினார்கள் என்ற விபரம் எனக்கு ஞாபகமில்லை. அ.சா.1 திவ்யகுமார் என்பவர்தான் என்னிடம் புகாரை கொடுத்தார். புகாரில் இருசக்கர வாகனத்தின் எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் மூன்று காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் என் முன்பாக கையொப்பமிட்டாரா என்றால் ஆம். நான் விசாரிக்கும்போது அவர் புகாரை எழுதிக்கொடுத்தார். பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னால் சரியல்ல. புகாரில் கூறியுள்ளதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை :–</u> இல்லை.**

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.06.05 17:31:57 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**